திரு. க. இராமமூர்த்தி : நான் திரும்பப் பெறுகிறேன், நேரம் ஆயிற்றே என்பதற்காக.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 1-30)

(5) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 491 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

"In clause 2, for the words "four years and two months" *insert* the words "few years".

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

@ 490 ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.